## இஸ்லாமிய ஆட்சியதிகாரத்தின் சிறப்புகள்

இஸ்லாமிய ஆட்சிமுறையில் கீழ்க்காணும் சிறப்பம்சங்கள் உள்ளன:

### 1 வெளிப்படையாக, தெளிவாக சட்டங்கள் பேணிப் பின்பற்றப்படவேண்டும்

திருக்ஃகுர்ஆன் மற்றும் இறைத்தூதர் ﷺ அவர்களுடைய ஸஹீஹான ஆதாரப்பூர்வமான முறையில் அறிவிக்கப்பட்டுள்ள நபிமொழிகள் இஸ்லாமிய அரசியல் சட்டங்களின் அடிப்படை ஆதாரங்களாகும். சில சமயங்களில் இச்சட்டங்களின் மார்க்கச்சட்டக்கலை (ஃபிக்ஹு) அடிப் படையிலான விஷயங்களும் இதன் பகுதியாகவே ஆகிவிடுகின்றன. இதனைப்பற்றி திருக்ஃகுர்ஆன் மற்றும் நபிமொழிகளில் வெளிப் படையான, தெளிவான வாசகங்கள் இருப்பதில்லை. இவ்வகையில், மார்க்கச்சட்ட அடிப்படை விதிகள் அவற்றைக் கையாளுவதில் அரசி யல் சட்டங்களின் அந்தஸ்தினைப் பெறுகின்றன, ஏனெனில், இவற் றைப்பற்றி திருக்ஃகுர்ஆன் மற்றும் நபிமொழிகளில் வெளிப்படையா கவே கூறப்படவில்லை.

www.fuzaifalahi.com

ஒவ்வொரு சட்டமியற்றும் நிபுணரும் தத்தம் சமுதாயங்களின் நல னைக் காக்கும் வகையிலான, அவர்களுடைய குறிக்கோள்களை எட் டும் வகையிலானசட்டங்களையே வகுக்கின்றனர். மாறாக, இஸ்லாத் தில் சட்டங்களை வகுக்கும் உரிமை, கட்டளைகளையிடும் உரிமை அல்லாஹ்வுக்கு மட்டுமே உள்ளது. அவன் எந்த ஒரு தரப்பினருக்காக வும் இடமளிப்பதுமில்லை, எவர்மீதும் கொடுமையிழைப்பதும் இல்லை. ஆகவேதான், இஸ்லாமிச் சட்டங்களான ஷரீஅத் சட்டங் கள் நீதி மற்றும் நியாயத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. இச்சைகளைப் பின்பற்றுவதற்கு இங்கே சற்றும் இடமில்லை, அனை வரையும் அரவணைத்துச்செல்லும் பண்பே இதன் அடையாளமாகும்.

ஒரு முஸ்லிமுடைய நம்பிக்கையின் (ஈமான்) இன்றியமையாத கட மையாக அல்லாஹ்வின் கட்டளைகள் அமைகின்றன, மற்றும் தன்னு டைய விவாதம் மற்றும் கருத்துவேறுபாட்டுக்குரிய வியஷயங்களில் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதரின் தீர்ப்பே இறுதியானது என்ற நிலையினை மேற்கொள்வதையே அடிப்படையாகக் கொண்டதா கும். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

فَلَا وَرَبِّكَ لَا يُؤْمِنُونَ حَتَّىٰ يُحَكِّمُوكَ فِيمَا شَجَرَ بَيْنَهُمْ ثُمَّ لَا يَجِدُوا فِي أَنفُسِهِمْ

حَرَجًا مِّمَّا قَضَيْتَ وَيُسَلِّمُوا تَسْلِيمًا ﴿٦٥﴾ النسا 65 )

*பொருள்: இல்லை (முஹம்மதே), உம் இறைவன்மீது சத்தியமாக, அவர்கள் தங்களுக்கிடையே ஏற்பட்ட பிணக்குகளில் உம்மை நீதிபதி யாக ஏற்றுக்கொண்ட பின்னர் நீர் அளிக்கின்ற தீர்ப்பு குறித்து தம் உள் ளங்களில் எத்தகைய அதிருப்தியும் கொள்ளாமல் முற்றிலும், அதற்கு அடிபணியாதவரை அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாக ஆகமாட் டார்கள் (அந் நிசா :65)*

இஸ்லாமிய ஆட்சி அமைவதற்கான முக்கிய குறிக்கோள் அல்லாஹ் வின் சட்டங்கள் மற்றும் கட்டளைகளை அமலுக்குக் கொண்டுவந்து நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதன் அடிப்படையிலான ஷரீஅத் சட் டங்களுக்கேற்ப மக்களிடையே தீர்ப்புகளை வழங்குவதாகும். உல மாப்பெருமக்கள் தெளிவுபடுத்துவதுபோன்று க்ஹலீஃபா எனும் அந்தக் கலைச்சொல்லுக்கான விளக்கம் இதனைத் தெளிவுபடுத்து கின்றது. க்ஹிலாஃபத் என்பது மார்க்கத்தின் பாதுகாப்பு மற்றும் உலக நாடுகளில் ஆட்சியை நிலைநாட்டுவது என்பது நபித்துவத்தினைப் போன்ற ஒரு பொறுப்பாகும். முஸ்லிமான ஒரு க்ஹலீஃபா அல்லது ஆட்சியாளர் அல்லாஹ்வின் கட்டளைகளை அமல்படுத்துவது மற்றும் அவற்றிற்கேற்ப செயல்படுவது, மக்களை அவற்றின் அடிப்படையில் நடந்து கொள்ளுமாறு செய்வதில் அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர் களுடைய பிரதிநிதியாகப் பொறுப்பேற்று தன்னுடைய கடமையை நிறைவேற்றுபவர்கள் என்பதாகும்.

## 2 இறையச்சம் மட்டுமே முஸ்லிகளுக்கிடையே தெளிவாக மேன்மைபெறுவதற் கான அடிப்படையாகும்

இறைவனுடைய அச்சம், நற்காரியங்களைச் செய்தல் மற்றும் நற்குணங் கள் இஸ்லாமியச்சமுதாயத்தினரிடையே மேன்மையும் உயர்வும் பெறு வதற்கான குறியிலக்குகளாகும். ஆட்சியதிகாரமோ, உயர் பதவிகளோ அல்லது சமூக அந்தஸ்தோ இதனைப் பெற்றுத்தருவதில்லை. அல் லாஹ் தஆலா கூறுகிறான்:

يَٰٓأَيُّهَا ٱلنَّاسُ إِنَّا خَلَقۡنَٰكُم مِّن ذَكَرٖ وَأُنثَىٰ وَجَعَلۡنَٰكُمۡ شُعُوبٗا وَقَبَآئِلَ لِتَعَارَفُوٓاْۚ إِنَّ أَكۡرَمَكُمۡ عِندَ ٱللَّهِ
أَتۡقَىٰكُمۡۚ إِنَّ ٱللَّهَ عَلِيمٌ خَبِيرٞ ﴿١٣﴾ (الحجرات 13)

*பொருள்: மனிதர்களே, நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் பெண்ணி லிருந்தும் படைத்தோம், பிறகு, நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுக மாகிக்கொள்ளும்பொருட்டு உங்களை சமூகங்களாகவும் கோத்திரங் களாகவும் அமைத்தோம். உண்மையில், அதிக கண்ணியம் வாய்ந்த*

www.uzairfalahi.com

*வர் உங்களில் அதிக இறையச்சம் கொண்டவர்கள்தாம். நிச்சயமாக, அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனாகவும் தெரிந்தவனாகவும் இருக்கின்றான் (அல் ஹுஜ்ராத்:13)*

*இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:*

**لَا فَضْلَ لِعَرَبِيٍّ عَلَى عَجَمِيٍّ، وَلَا لِعَجَمِيٍّ عَلَى عَرَبِيٍّ، وَلَا أَحْمَرَ عَلَى أَسْوَدَ، وَلَا أَسْوَدَ عَلَى أَحْمَرَ، إِلَّا بِالتَّقْوَى**

*பொருள்: எந்த ஒரு அரேபியருக்கும் அரேபியரல்லாத ஒருவர் மீதும் மேன்மையில்லை, எந்த ஒரு அரேபியரல்லாத ஒருவருக்கும் அரேபியர்மீது மேன்மையில்லை, எந்த ஒரு வெள்ளையருக்கும் கருப்பர் மீதும் எந்த ஒரு கருப்பருக்கும் வெள்ளையர்மீதும் மேன்மையில்லை, இறையச்சத்தின் அடிப்படையிலேயன்றி (அஹ்மத்).*

## 3 உள் நாட்டவர் மற்றும் அயல் நாட்டவர்களுடனான உடன்படிக்கைகளைப் பேணிப் பின்பற்றுதல்

இது இஸ்லாமிய அரசியலமைப்பின் அமைதிகாக்கும் வகையிலான மிகவும் மகத்தான சிறப்பம்சமாகும். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

وَأَوْفُواْ بِعَهْدِ ٱللَّهِ إِذَا عَٰهَدتُّمْ وَلَا تَنقُضُواْ ٱلْأَيْمَٰنَ بَعْدَ تَوْكِيدِهَا وَقَدْ جَعَلْتُمُ ٱللَّهَ عَلَيْكُمْ كَفِيلًا ۚ إِنَّ ٱللَّهَ يَعْلَمُ مَا تَفْعَلُونَ ﴿٩١﴾ (النحل 91)

*பொருள்: (அல்லாஹ்விடம்) நீங்கள் ஒப்பந்தம் ஏதும் செய்திருந்தால், அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுங்கள். உங்களுடைய சத்தியங்களை உறுதிப்படுத்திய பின்னர் முறிக்காதீர்கள், ஏனெனில், நீங்கள் அல்லாஹ்வை உங்களுக்குச் சாட்சியாக்கியுள்ளீர்கள். நீங்கள் செய்கின்ற அனைத்துச் செயல்களையும் திண்ணமாக, அல்லாஹ் நன்கறிவான் (அந்நஹ்ல்:91)*

வாக்குறுதிகளை நிறைவேற்றுவது கட்டாயக் கடமையானதாகும் மற்றும் அதற்கேற்பவே வாழ்க்கையை மேற்கொள்ளவேண்டும். அதற்கு மாறு செய்வது அனுமதிக்கப்பட்டதல்ல, அல்லாஹ் தஅலா மற்றொரு இடத்தில் கூறுகின்றான்:

وَأَوْفُواْ بِٱلْعَهْدِ ۖ إِنَّ ٱلْعَهْدَ كَانَ مَسْـُٔولًا ﴿٣٤﴾ (الإسراء 34)

www.uzairfalahi.com

பொருள்: *மேலும், ஒப்பந்தத்தை முறையாகப் பேணி வாழுங்கள். ஏனெனில், ஒப்பந்தம் குறித்து நீங்கள் விசாரணை செய்யப்பட்டே தீருவீர்கள் (அல் இஸ்ரா:34)* இதனுடைய நோக்கம் அனைத்து முஸ்லிம் நாடுகளிலும் அமைதி நிலவவேண்டும் என்பதாகும்,

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

**أَفْشُوْا السَّلاَمَ بَيْنَكُمْ ِمسلم )**

பொருள்: *உங்களுக்கிடையே சலாம் சொல்வதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள் (முஸ்லிம்).* ஒரு இஸ்லாமிய ஆட்சியின்கீழ் அதன் பிரஜைகளில் முஸ்லிம் மற்றும் த்ஜிம்மி எனும் மாற்று மதத்தினரிடையே எந்த வித்தியாசமும் காட்டப்படுவதில்லை. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

**إِنَّ اللهَ جَعَلَ السَّلَامَ تَحِيَّةً لِأُمَّتِنَا، وَأَمَانًا لِأَهْلِ ذِمَّتِنَا ِالمعجم الكبير للطبراني )**

பொருள்: *அல்லாஹ் தஅலா சலாம் சொல்வதை முஹம்மத் ﷺ அவர்களுடைய உம்மத்தினர் ஒருவரையொருவர் வாழ்த்துவதற்கும் இஸ்லாமிய ஆட்சியின்கீழ் இருக்கும் மாற்று மதத்தினருக்குப் பாதுகாப்புக்கான வழியாகவும் ஆக்கியிருக்கின்றான் (தபரானி).*

உலக நாடுகளான அயல்நாட்டினருடைய விவகாரங்களிலும் இஸ்லாமிய அரசு அல்லாஹ் நிர்ணயித்துள்ள எல்லைகள் மீறப்படாத வரையில் மற்றும் முஸ்லிம் நாடுகளின்மீது ஆக்கிரமிப்பு, படையெடுப்பு இல்லாத வரையில் அமைதிக்கான அழைப்பினையே கொடுக்கின்றது. அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

لَّا يَنْهَىٰكُمُ ٱللَّهُ عَنِ ٱلَّذِينَ لَمْ يُقَٰتِلُوكُمْ فِى ٱلدِّينِ وَلَمْ يُخْرِجُوكُم مِّن دِيَٰرِكُمْ أَن تَبَرُّوهُمْ وَتُقْسِطُوٓا۟ إِلَيْهِمْ ۚ إِنَّ ٱللَّهَ يُحِبُّ ٱلْمُقْسِطِينَ ﴿٨﴾ إِنَّمَا يَنْهَىٰكُمُ ٱللَّهُ عَنِ ٱلَّذِينَ قَٰتَلُوكُمْ فِى ٱلدِّينِ وَأَخْرَجُوكُم مِّن دِيَٰرِكُمْ وَظَٰهَرُوا۟ عَلَىٰٓ إِخْرَاجِكُمْ أَن تَوَلَّوْهُمْ ۚ وَمَن يَتَوَلَّهُمْ فَأُو۟لَٰٓئِكَ هُمُ ٱلظَّٰلِمُونَ ﴿٩﴾ الممتحنة : - )

பொருள்: *தீன் (இறைமார்க்கம்) தொடர்பான விஷயத்தில் எவர்கள் உங்களுடன் போர் புரியவில்லையோ, உங்களை உங்களுடைய வீடுகளிலிருந்து வெளியேற்றவில்லையோ அவர்களிடம் நீங்கள் நல்ல விதமாகவும் நீதியுடனும் நடப்பதிலிருந்து அல்லாஹ் உங்களைத் தடுப்ப*

www.uzairfalahi.com

*தில்லை. திண்ணமாக, அல்லாஹ் நீதி செலுத்துவோரை நேசிக்கின்றான். அவன் தடுப்பதெல்லாம் எவர்கள் தீன் தொடர்பாக உங்களுடன் போர் புரிந்தார்களோ, உங்களுடைய வீடுகளிலிருந்து வெளியேற்றினார்களோ, மேலும், உங்களை வெளியேற்றுவதில் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டார்களோ அவர்களுடன் நீங்கள் நட்பு கொள்வதைத்தான். அவர்களுடன் எவரேனும் நட்பு கொண்டால் அவர்களே கொடுமையாளர்கள் ஆவர்* (அல் மும்தஹினா).

* * *

www.uzairfalahi.com